27th March 1961]

இல்லையென்றும் சொல்லும்போது இதனால் பஸ் விபத்துக்கள் ஏற்படவில்லை என்று ஏற்படுகிறது. ஆகவே, மீண்டும் பஸ்களில் ரேடியோக்களை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இதில் நன்றாக அரசாங்கம் பரிசீலனைசெய்து தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது—இப்போது பஸ்களில் ரேடியோ வைப்பதில்லை என்று.

SRI S. NAGARAJA MONEGAR : இது விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கும் என்று சர்க்கார் கருதுகிறது. ஆகையால் பஸ்கள் மாதிரி சொந்தக் கார்களிலும் ரேடியோ வைப்பதைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது பஸ்களில்—பொது மக்கள் பிரயாணம் செய்யக் கூடிய வாகனங்களில்தான்—ரேடியோ வைப்பதற்குத் தடை இருக்கிறது. கார்களைப் பொருத்த வரையில், அது தனியார் போகக்கூடிய போக்குவரத்து வசதி. விபத்துக்கள் ஏற்படாமல் மிகவும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்வார்கள். எப்போது வைக்கலாம், எப்போது நிறுத்த வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்கே விடப்பட்டிருக்கிறது.

Shooting of film (Sathanur Dam)

* 1119 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டில் சினிமாப்படம் எடுக்க இலவசமாக அனுமதிக்கப்படுகிறதா அல்லது கட்டணம் உண்டா?

(இ) எவ்வளவு கட்டணம் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Shooting of films in Dam is allowed by Government on payment of a prescribed charge.

(இ) Rs. 250 per day.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த சினிமா படங்களை எடுத்து கொள்ளை லாபம் சம்பாதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ர்க்காருக்கு வருமானம் வரக்கூடிய இந்த முறையிலே மேலும் அபிவிருத்தி செய்து அதிகப்படி கட்டணம் ஏற்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : அந்த உத்தேசம் இருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : சினிமா படங்களுக்கு அத்தகைய சீனரி ரொம்ப முக்கியம். அதைக் கொண்டுதான் இந்த சினிமா படங்களின் விமரிசை ஜாஸ்தியாகி, வரும்படி அதிகமாக வருகிறது. ஆகையால் தினம் ஒன்றுக்கு இவ்வளவு என்று போடாமல், இந்த சினிமா எங்கே போடப்பட்டாலும் வரக் கூடிய வரும்படியில் இவ்வளவு பர்ஸெண்டேஜ் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யலாமா ?

THE HON. SRI P. KAKKAN : அந்த உத்தேசம் அரசாங்கத்திற்கு இப்போது இல்லை.

[27th March 1961

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், சாத்தனூர் டாமில் தண்ணீருக்கு மத்தியில் சிறு மலை ஒன்று இருக்கிறதே அதன்மேல் சிறிய பங்களா கட்டினால் படம் எடுக்க நல்ல வாய்ப்பு ஏற்படும், ஒரு நல்ல வ்யூ உண்டாகும். அந்த முறையில் அங்கே ஒரு கட்டிடம் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது அந்த உத்தேசமும் இல்லை.

SRI K. VINAYAKAM : இந்த ஸ்டுடியோக்களில் வாடகைக்குத் தருவது ஒரு ஷூட்டிங் ஃப்ளோருக்கு மினிமம் 500 ரூபாய் நான்கு மணி நேரத்திற்கு என்று இருக்கும்போது, நமது சாத்தனூர் டாமை கண்ணம்பாடி டாமைப்போல அழகாக அமைத்திருப்பதால், அவுட்-டோர் ஷூட்டிங்குக்கு ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் வசூல் செய்யப்பட்டாலும் அந்த முதலாளிகள் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். 250 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்திப் பார்த்து லாபம் வந்தால் வைத்துக்கொள்ளலாம், இல்லையென்றால் மறுபடியும் குறைத்து விடலாம். அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : நாங்கள் இன்றைக்கு 250 ரூபாய் வாடகை என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். இதைக் காட்டிலும் ஓரளவு உயர்த்தலாமா என்று அரசாங்கம் பிரதம நீர்ப்பாசன என்ஜினியரைக் கேட்டிருக்கிறது. மைசூர் பிருந்தாவனத்தில் எவ்வாறு வாடகை பெறுகிறார்கள் என்று அந்த அரசாங்கத்தின் அபிப்பிராயத்தையும் கேட்டிருக்கிறது. பின்னர் தான் ஒரு முடிவுக்கு வர முடியும்.

SRI K. B. S. MANI : இந்த சினிமா படங்கள் பிடிப்பது சாத்தனூர் அணைக்கட்டில் மட்டுமல்லாமல் மஹாபலிபுரத்திலும் பிடிக்கப்படுகிறது. அங்கே கெஸ்டுகளுக்காக கட்டப்பட்டிருக்கிற கெஸ்ட் ஹவுஸிலே ட்ரயல்ஸ் நடத்துவதற்காக பழகிக் கொள்வதற்காக அங்கே தங்குகிறார்கள். மஹாபலிபுரத்தில் ஸ்டண்ட் படம் பிடிக்க அங்கே வந்து மத்திய சர்க்காரிடத்தில் பர்மிஷன் பேரில் இனமாக படம் பிடிக்கிறார்கள். நீலகிரி போன்ற இடங்களில் கூட இந்த மாதிரி படம் பிடிக்கிறார்கள். எங்கு படம் பிடித்தாலும் இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அதை வசூலித்தால் அந்த வருமானத்திலிருந்து மக்களுடைய வரிப் பளுவை குறைக்க சௌகரியமாக இருக்கும். இந்த உத்தேசத்தோடு எங்கு இயற்கை காட்சிகளை படம் பிடிப்பதானாலும் இவ்வளவு கட்டணம் கொடுக்கவேண்டும் என்று விதிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : சாத்தனூர் டாமைப் பற்றிய கேள்வி இது. கனம் அங்கத்தினர் வேறு அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

27th March 1961]

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : சாத்தனூர் டாமில் எத்தனை ஸ்டூடியோக்கள் வந்து படம் பிடிக்கிறது? டிமான்ட் எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. டிமான்ட் ஜாஸ்தியாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த 250 ரூபாய் என்பது படம் எடுப்பதற்கு மாத்திரமா? அல்லது வரக் கூடியவர்கள் தங்குவதற்காகக் கொடுக்கப்படும் கட்டணம் உட்படவா?

THE HON. SRI P. KAKKAN : ஒரு நாளைக்கு 250 ரூபாய் என்ற தகவல் இருக்கிறது. தங்குவதற்கு தனியாகத்தான் வாடகை கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறேன். கட்டிடங்களில் தங்கினால் வாடகை கொடுக்கவேண்டும்.

SRI J. MATHA GOWDER : நீலகிரியைப் பொருத்தவரையில் உதகைக்கு சினிமா படம் எடுக்க வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உதகைக்கு வரக்கூடியவர்களை வரவேற்கத்தான் நாங்கள் எப்போதுமே தயாராக இருக்கிறோமே. ஆகையால் அங்கு வருகின்றவர்களுக்கு எந்தவித கட்டணமும் விதிக்காமல் அவர்கள் இஷ்டம் போல் படம் எடுக்க அரசாங்கம் அனுமதி அளிக்குமா?

THE HON. SRI P. KAKKAN : அதுதான் நான் சொன்னேன். பரிசீலனை செய்துதான் பார்க்கவேண்டும்.

Birds sanctuary (near Sathanur dam)

*1120 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் உள்ள காட்டில் ஒரு பறவை சரணாலயம் ஏற்படுத்த உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : சாத்தனூரில்கூட வேடந்தாங்கலில் இருக்கும் பறவை விதங்களில் மூன்றுவித பறவைகள் உள்ளன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அங்கேயும் பறவைகள் சரணாலயம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா? இல்லை என்றால் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பறவை இல்லாத கிராமம் இல்லை—நகரமும் இல்லை. அதிலும் தேக்கம் இருக்கும் இடத்தில் பறவைகள் பறந்து கொண்டுதான் இருக்கும். கனம் அங்கத்தினர் பார்த்திருப்பார்கள் வேடந்தாங்கலில் பலவித பறவைகள் இருக்கின்றன. குழந்தைகள் கேட்கிற மாதிரி ஒவ்வொரு இடத்திலும் எங்களுக்குச் சரணாலயம், சரணாலயம் என்று சொல்வது முறையல்ல.

SRI S. NAGARAJA MONIGAR : சாத்தனூரில் பறவைகள் சரணாலயம் மற்றும் படம் பிடிக்க தனியாக கட்டிடம் கட்ட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் கேட்டிருக்கிறார். ஏழைகள்